**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.</u>**

**முன்னிலை :** செல்வி. சே.தா. ஆயிஷ் பேகம், பி.ஏ., பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு.

2023ம் ஆண்டு ஜூலை மாதம் 21ம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>இடைநிலை மனு எண். 2/2023-ன் அசல் வழக்கு எண்.6/2019</u>**

பெருமாள் ..மனுதாரர்/வாதி

/எதிர்/

பழனி .. எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு 19.07.2023 தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. எஸ். கார்த்திகேயன், அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஜி. குணசேகரன், அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதம் கேட்டுக்கப்பட்டு, மனு ஆவணங்களைப் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>உத்தரவு</u>**

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 14(3)-ன் கீழ் மேற்படி வழக்கில் மனுதாரர்/வாதி மனு அட்டவணையில் விவரித்துள்ள ஆவணங்களை தாக்கல் செய்ய மனுதாரருக்கு அனுமதி அளித்து ஆவணங்களை ஏற்று தக்க உத்தரவு பிறப்பிக்க கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுவின் சுருக்கம்</u> :-**

இம்மனுவின் மனுதாரர் இவ்வழக்கில் வாதி. தனக்கு பாத்தியப்பட்ட தாவா பி அட்டவணை சொத்துக்களை எதிர்மனுதாரர்/பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்திருந்தார். விளம்புகை மற்றும் சுவாதீனம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் தனக்கு உரிமை இல்லாத அதிகப்படியான

சொத்துக்களை தன்னுடைய கிரைய ஆவணத்தில் ஏற்படுத்திக்கொண்டு அதன் அதிகப்படியான சொத்துக்களை அனுபவித்து வருகிறார். எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர்களை குறுக்கு விசாரணை செய்யும்போது மனுதாரர் தன் வழக்குரையில் தன்னுடைய சொத்துக்கள் குறித்து உள்ளதை விட எதிர்மனுதாரர் தரப்பில் மூல ஆவணங்களில் உள்ள அளவுகள் குறித்தும் தற்போது உள்ள அளவுகள் குறித்தும் பிரதிவாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உண்மை நிலவரங்களை தெரிவிக்கும் பொருட்டு தற்போது பிரதிவாதிகள் சொத்திற்கான மூல ஆவணங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதால் மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். எனவே இந்த ஆவணங்களை பெற்றுக்கொள்ள வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

**3. எதிர்மனுதாரர் தரப்பில் இடை மனு எண் 1/2023ல் தாக்கல் செய்துள்ள எதிர் உரையை இம்மனுவில் ஏற்பதாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த எதிருரையின் சுருக்கம்.**

மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மனுதாரர் மனுவில் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றும் அதில் மூல ஆவணங்களில் உள்ள அதிகப்படியான அளவுகளில் ஆவணங்கள் உருவாக்கப்பட்டுள்ளது என்று மனுதாரர் கூறுவது சட்டப்படி தவறானது. இத்தாவா விளம்புகை குறித்த தாவாவாகும். மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் உண்மை பிரச்சனை யாதெனில் மனுதாரர்கள் தரப்பில் வா.சா.1 முதல் வா.சா.7 வரையிலான சாட்சிகள் ஏற்கனவே விசாரணை செய்யப் பட்டு தற்போது கூடுதல் ஆவணம் தாக்கல் செய்ய ஏற்பட்டுள்ள காலதாமதத்தை மன்னிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதத்திற்கான காரணம் குறிப்பிடப்படவில்லை. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணம் ஏற்புடையதல்ல. இவ்வெதிர்மனுதாரர்களை அலைகழிக்க வேண்டுமென்றே கெட்ட நோக்கத்துடன் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்கள்/வாதிகள் மேற்கொண்டு வழக்கினை நடத்தினால் மனுதாரர்களுக்கு சாதகமான வாய்ப்பு இல்லை என்பதால், பொய்யான காரணங்களை உரைத்து இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதை செலவுத் தொகையோடு தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. மனுதாரரின் மனு எதிர்மனுதாரரின் எதிருரை ஆகியவற்றைப் பரிசீலனை செய்ததில் இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்?

5. கற்றறிந்த மனுதாரர்/வாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், தற்போது மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மனுதாரர்/வாதி வழக்கை நிரூபணம் செய்ய அவசியமான ஆவணம் என்றும், எனவே அந்த ஆவணம் மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை கோப்பிற்கு பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், எனவே இம்மனுவினை அனுமதித்தால்தான் அந்த ஆவணத்தின் அடிப்படையில் மனுதாரர்/வாதி தங்கள் தரப்பை நிரூபணம் செய்ய இயலும், எனவே இம்மனுவினை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

6. கற்றறிந்த எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள ஆவணம் ஏற்புடைய ஆவணம் அல்ல. இந்த ஆவணம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி மற்றும் அவரது முன் கிரையதாரர் சம்மந்தப்பட்ட ஆவணங்கள், மேலும் மனுதாரர்/வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்தில் வாதிக்கு என்ன உரிமை உள்ளது என்பதை மனுதாரர்/வாதி அவரது ஆவணத்தைக் கொண்டே நிரூபணம் செய்ய வேண்டும். எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இருக்கும் பிழைகளை வைத்து மனுதாரர்/வாதி தரப்பில் சொத்தில் உரிமை உள்ளது என்பதனை கோர இயலாது. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் உள்ள பிழைகளின் அடிப்படையில் வாதி தன்னுடைய வழக்கில் வெற்றி காண இயலாது. எனவே மனுதாரர்/வாதி தனது ஆவணத்தின்படி மட்டுமே இவ்வழக்கை நிரூபணம் செய்ய கடமைப்பட்டவராகிறார். எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு ஆவணங்கள் குறித்து வாதி சாட்சியம் அளிக்க இயலாது என்றும், எனவே இந்த மனுவினை எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் செலவுத் தொகையோடு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று வாதிடப்பட்டுள்ளது.

7. **<u>தீர்வு</u> :-**

மனுதாரரின் மனு, சத்தியபிரமாணம் மற்றும் எதிருரை, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் மனுதாரர்/வாதி தரப்பில் இந்நீதிமன்றத்தில் மனுவோடு தாக்கல் செய்யப்படும்

ஆவணங்களை காலதாமதமாக தாக்கல் செய்வதை மன்னித்து ஆவணங்கள் கோப்பிற்கு ஏற்றுக்கொள்ள வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதி தரப்பில் இந்த ஆவணங்களை ஏற்று வழக்கை நடத்த அனுமதியளிக்க வேண்டும் என்று வாதிடப்பட்டுள்ளது எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இந்த ஆவணங்கள் சாட்சியத்திற்கு ஏற்புடையதல்ல என்றும், மனுதாரர்/வாதி அவரது ஆவணங்கள் குறித்துதான் தாக்கல் செய்து தனது வழக்கை நிரூபணம் செய்ய வேண்டும் என்றும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு ஆவணம் தாக்கல் செய்துள்ளது ஏற்புடையது அல்ல என்றும், எனவே இந்த மனுவினை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வாதிடப்பட்டுள்ளது.

8. மேலும் மனுதாரர்/வாதி தரப்பில் இம்மனுவோடு தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஆராய்கையில், 25.09.2017ம் தேதியிட்ட சின்னக்குட்டி கவுண்டர் வகையறாவிடமிருந்து முனுசாமி என்பவர் கிரையம் பெற்ற கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 16.01.1972ம் தேதியிட்ட சோமசுந்தரம், முனுசாமி, சுப்பராயன், தாண்டவராயன், கிருஷ்ணன் ஆகியோர்கள் ஏற்படுத்திக்கொண்ட தெருவழிபாதை ஒப்பந்த பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் மனுதாரர்/வாதி தனது வழக்கை நிரூபணம் செய்ய தேவையான ஆவணங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இந்த ஆவணங்கள் குறித்து வாதி சாட்சியம் அளிக்க இயலாது என்றும், மேலும் மனுதாரர்/வாதி தனது வழக்கை தனது ஆவணம் கொண்டுதான் நிரூபணம் செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு வாதம் வழக்கு வாதத்தின் போது கருத்தில் கொள்ளப்படவேண்டிய வாதமாக உள்ளது. மேலும் வழக்குத் தரப்பினர்கள் தங்களது வழக்கை நிரூபணம் செய்ய தேவைப்படும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ள நிலையில் அந்த ஆவணம் சாட்சியத்திற்கு உகந்த ஆவணமா என்பது மட்டுமே இந்த மனுவில் பொறுத்து தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி. எதிர்மனுதாரருக்கு ஆவணங்கள் குறித்து குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு உள்ளது. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் சான்றிட்ட நகல் ஆவணங்களாக உள்ள நிலையில் அந்த ஆவணங்களை மனுதாரர்/வாதிக்கு தனது வழக்கை நிரூபணம் செய்ய ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டி கோப்பிற்கு பெற்றுக்கொள்ள உகந்த ஆவணங்கள் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. மனுவின் தன்மையை கருத்தில் கொண்டு உபயதரப்பினர்கள் மனுவின் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்க வேண்டியது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவாக,** இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து செய்து உத்திரவிடப்படுகிறது.

இவை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு ஜுலை மாதம் 21ம் நாளான இன்று இந்நீதிமன்ற அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.

**<u>மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்.</u>**

- இல்லை -

**<u>எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்.</u>**

- இல்லை -

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.